www.freetnbooks.com

# Kanchipuram Dt

## அரையாண்டுப் பொதுத் தேர்வு - 2025

## பதினொன்றாம் வகுப்பு

பதிவு எண் :

## பொருளியல்

நேரம் : 3.00 மணி

பகுதி - அ

மதிப்பெண்கள் : 90

I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. 20 x 1 = 20

1. சமநிலை விலை என்பது அந்த விலையில் ________.
   அ) எல்லாம் விற்கப்படுகிறது. ஆ) வாங்குபவர்கள் பணத்தை செலவிடுகின்றனர்.
   இ) தேவையின் அளவும் அளிப்பின் அளவும் சமம் ஈ) மிகைத்தேவை சுழியம்
2. பொதுவாக எந்தக் கோட்பாடு நுண்ணியல் பொருளாதாரத்தை உள்ளடக்கியுள்ளது?
   அ) விலைக் கோட்பாடு ஆ) வருமானக் கோட்பாடு
   இ) வேலைவாய்ப்புக் கோட்பாடு ஈ) வணிகக் கோட்பாடு
3. இயல்பெண் பயன்பாட்டு ஆய்வை வழங்கியதில் முதன்மையானவர்
   அ) ஜே.ஆர். ஹிக்ஸ் ஆ) ஆர்.ஜி.டி. ஆலன் இ) மார்ஷல் ஈ) ஸ்டிக்லர்
4. இறுதிநிலைப் பயன்பாடு சுழியமாக இருக்கும் போது மொத்தப் பயன்பாடு ________.
   அ) குறைவாக ஆ) உச்சமாக இ) சுழியமாக ஈ) எதிர்மறையாக
5. சம உற்பத்திக் கோட்டின் வேறுபெயர் ________.
   அ) நெகிழ்ச்சியற்ற அளிப்புக் கோடு ஆ) நெகிழ்ச்சியற்ற தேவைக்கோடு
   இ) சம இறுதிநிலை பயன்பாடு ஈ) சம உற்பத்தி வளைகோடு
6. காப்-டக்ளஸ் உற்பத்தி சார்பு எதனை அடிப்படையாகக்கொண்டது?
   அ) வளர்ந்துசெல் விகித விளைவு விதி ஆ) குறைந்துசெல் விகித விளைவு விதி
   இ) மாறா விகித விளைவு விதி ஈ) மேற்காணும் அனைத்தும்
7. செலவு என்பது
   அ) விலை ஆ) மதிப்பு இ) மாறாச்செலவு ஈ) உற்பத்திச்செலவு
8. சராசரிச் செலவுக்கான வாய்பாடு ________.
   அ) AVC/Q ஆ) TC/Q இ) TVC/Q ஈ) AFC/Q
9. நிறுவனத்தின் சமநிலை என்பது ________.
   அ) MC= MR ஆ) MC > MR இ) MC < MR ஈ) MR = Price
10. தொன்மைக் கூலிக் கோட்பாட்டை எடுத்துரைத்தவர் யார்?
    அ) ரிக்கார்டோ ஆ) கீன்ஸ் இ) மார்ஷல் ஈ) வாக்கர்
11. புத்தாக்க இலாபக் கோட்பாட்டை வழங்கியவர் ________.
    அ) ஹாலே ஆ) சும்பீட்டர் இ) கீன்ஸ் ஈ) நைட்
12. வலுவான பொருளாதாரங்களைக் கொண்ட நாடுகள் வரிசையில் இந்தியாவின் இடம் ________.
    அ) நான்கு ஆ) ஏழு இ) ஐந்து ஈ) பத்து
13. திருவள்ளுவரின் பொருளாதார கருத்துகள் குறிப்பாகக் கூறுவது ________.
    அ) செல்வம் ஆ) வறுமை சமுதாயத்தின் சாபம் இ) வேளாண்மை ஈ) மேற்காண் அனைத்தும்
14. வாழ்க்கைத்தரக் குறியீட்டெண்ணை உருவாக்கியவர் ________.
    அ) திட்டக்குழு ஆ) நேரு இ) D.மோரிஸ் ஈ) பிஸ்வாஜித்
15. புதிய பொருளாதாரக் கொள்கை கீழ்க்கண்டவற்றுள் எதனை உள்ளடக்கியது?
    அ) வெளிநாட்டு முதலீடு ஆ) வெளிநாட்டு தொழில்நுட்பம்
    இ) வெளிநாட்டு வணிகம் ஈ) இவை அனைத்தும்
16. ஊரகப் பொருளாதாரத்தின் முக்கிய இயல்பு ________.
    அ) வேளாண்மையைச் சார்ந்திருத்தல் ஆ) அதிக மக்கள் தொகை அடர்த்தி
    இ) குறைந்த அளவு மக்கள் தொகை ஈ) ஏற்றத்தாழ்வுக் குறைவு
17. ஊரகத் தொழிற்சாலைக்கு எடுத்துக்காட்டு தருக.
    அ) சர்க்கரை ஆலைத் தொழில் ஆ) பாய் தயாரிக்கும் தொழில்
    இ) சிமெண்ட் தொழில் ஈ) காகிதத்தொழில்
18. பாலின விகிதத்தில் தமிழ்நாட்டின் தரம் ________.
    அ) முதல் ஆ) இரண்டாவது இ) மூன்றாவது ஈ) நான்காவது

www.freetnbooks.com | FREETNBOOKS

www.freetnbooks.com



19. மனித வளர்ச்சிக் குறியீட்டில் தமிழ் நாட்டின் தரம் ________.
அ) 2 ஆ) 4 இ) 6 ஈ) 3

20. x + y = 5 and x – y = 3 என்றால் X ன் மதிப்பு ________ ஆகும்.
அ) 4 ஆ) 3 இ) 16 ஈ) 8

பகுதி - ஆ

II. எவையேனும் 7 வினாக்களுக்கு விடையளி. (வினா எண் 30 கட்டாய வினா) 7 x 2 = 14

21. இயல்புரை அறிவியலின் இலக்கணத்தை வரையறுக்க.
22. சமநோக்கு வளைகோடுகள் என்றால் என்ன?
23. உற்பத்திக் காரணிகளை வகைப்படுத்து.
24. மூழ்கும் செலவுகள் என்றால் என்ன?
25. விலையை ஏற்பவர் யார்?
26. நீர்மை விருப்பத்தின் பொருள் யாது?
27. மனித மேம்பாட்டுக் குறியீட்டெண் (HDI) மற்றும் வாழ்க்கைத்தரக் குறியீட்டெண் (PQLI) ஆகியவற்றை வேறுபடுத்துக.
28. குடிசைத்தொழில் - வரையறு.
29. மொத்த மாநில உற்கூட்டு உற்பத்தி (GSDP) - வரையறு.
30. போட்டியின் அடிப்படையில் அங்காடியை வகைப்படுத்துக.

பகுதி - இ

III. எவையேனும் 7 வினாக்களுக்கு விடையளி. (வினா எண் 40 கட்டாய வினா) 7 x 3 = 21

31. பயன்பாட்டின் முக்கிய இயல்புகள் யாவை?
32. நுகர்வோர் எச்சத்திற்கு மார்ஷலின் இலக்கணத்தைத் தருக.
33. நிலத்தின் சிறப்பியல்புகள் யாவை?
34. வாய்ப்புச்செலவை எடுத்துக்காட்டுகளுடன் வரையறு.
35. வாரம், போலி வாரம் - வேறுபடுத்துக.
36. கிராம சர்வோதயா - சிறு குறிப்பு வரைக.
37. GST என்றால் என்ன? அதன் நன்மைகளை எழுதுக.
38. MUDRA வங்கியின் நோக்கங்களை பட்டியலிடுக.
39. தமிழ்நாட்டின் ஜவுளித்துறை முன்னேற்றம் பற்றி விவரி.
40. $16x - 4 = 68 + 7x$ என்றால் தேவையளவு X மதிப்பினைத் தீர்க்க. (தீர்வு $X = 8$)

பகுதி - ஈ

IV. அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். 7 x 5 = 35

41. அ) பொருளியலின் தன்மையையும், எல்லையையும் விவரி. *(அல்லது)*
ஆ) உற்பத்தி வாய்ப்பு வளைகோட்டைக் கொண்டு பொருளாதாரத்தின் அடிப்படைப் பிரச்சனைகளை விவரி.
42. அ) தேவை விதி மற்றும் அதன் விதி விலக்குகளை விவரி. *(அல்லது)*
ஆ) விகித அளவு விளைவு விதியை உதாரணத்துடன் விளக்குக.
43. அ) பலவேறுபட்ட விலை நிலைகளில் AR மற்றும் MR கோடுகளுக்கிடையேயான தொடர்பை விளக்குக. *(அல்லது)*
ஆ) சில்லோர் முற்றுரிமையின் பண்புகளை விளக்குக.
44. அ) ரிக்கார்டோவின் வாரக்கோட்பாட்டை எடுத்துக்காட்டுடன் விவரி. *(அல்லது)*
ஆ) கீன்சின் வட்டிக் கோட்பாட்டை விவரி.
45. அ) இந்தியப் பொருளாதாரத்தின் வலுவான கூறுகளை விவரி. *(அல்லது)*
ஆ) பொருளாதார முன்னேற்றத்தில் சிறுதொழில் நிறுவனங்களின் பங்கினை விவரி.
46. அ) 2015- 2020 ஆம் ஆண்டிற்கான ஏற்றுமதி-இறக்குமதிக் கொள்கையின் சிறப்பியல்புகளை விளக்குக. *(அல்லது)*
ஆ) ஊரகப் பொருளாதாரத்தின் பண்புகள் விசித்திரமானவை. - விவாதி.
47. அ) தமிழ்நாட்டிலுள்ள பல்வேறு வகையான ஆற்றல் வளங்களை விவரி. *(அல்லது)*
ஆ) பொருளியல் துறையில் தகவல் தொழில்நுட்பங்கள் எவ்வாறு பயன்படுத்தப்படுகின்றன.?

******

www.freetnbooks.com | FREETNBOOKS